
Koviloor Digital Library

ஓம்

சிவமயம்

வள்ளலாரும் வேதாந்தமும்



சிதம்பரம இராமலிங்க வள்ளல்

ஆசிரியர் :

திரு பொன். கோவிந்தசுவாமி

1976

அடக்க விலை ரூ. 00—75

A.No. 17388

R65: வள்ள

Koviloor Digital Library

Koviloor Digital Library

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு.
கோகலே ஹால் தெரு.
[illegible] 560.

ஓம்

சிவமயம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

4-3

திருவருட் பிரகாச வள்ளலார்


சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

அருளிய

திருவருட்பா — ஆறந்தங்கள்

வள்ளலாரும் வேதாந்தமும்





ஆசிரியர்:

திரு. பொன். கோவிந்தசுவாமி

(ஓய்வு பெற்ற மலேசியா வித்யாதரிசி

தலைவர்,

சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

கடலூர்

சங்க வெளியீடு


1976

முருகன் அச்சகம்,
இராயப்பேட்டை, சென்னை-14

அடக்க விலைப் பதிப்பு
விலை ரூ. 00—75

Koviloor Digital Library

முதற் பதிப்பு : ஜூலை, 1977
உரிமை ஆசிரியருக்கே



ஆசிரியர் :
திரு. பொன். கோவிந்தசுவாமி
16-B, தெற்குக் கவரைத் தெரு
மஞ்சகுப்பம், கடலூர்-1, தென்னாற்காடு

Koviloor Digital Library

4-3

ஜெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
கோகலே ஹால் தெரு,
சிவகங்கை - 623 560.




இராமநாதன், M.A.,M.
தமிழ் பேராசிரியர்
தமிழ் துறைத் தலைவர்
அரசு கலைக் கல்லூரி
இராமநாதபுரம்
(இ) அரண்மனை சிறுவயல்

திருவருட்பிரகாச வள்ளலார்
சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள்

Koviloor Digital Library

ஓம்.

சிவமயம்



Koviloor Digital Library

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
கோகலே ஹால் தெரு,
சிவகங்கை-623 560.

பதிப்புரை

கடலூர் சமரச சுத்த சன்மார்க்கச் சங்கம் 1-12-1971ம் ஆண்டு புதன்கிழமை கார்த்திகை தீப நாளன்று மேட்டுக்குப்பம் தவத்திரு சிதம்பர சுவாமிகளால் திறந்து வைக்கப்பெற்றது. சங்கத்தில் நாள்தோறும் இரவு 7-00 மணி முதல் 8-30 மணி வரை திருவருட்பா வகுப்பு நடைபெற்று வருகின்றது. அதில் திருவருட்பா பாராயணம், வசனப் பகுதிகளை வாசித்து விளக்கம் செய்தல், தியானம், சத்விசாரணை முதலியன நடைபெறுகின்றன. ஒவ்வொரு வியாழக்கிழமையும் திருவடிப் புகழ்ச்சி, அருட்பெருஞ் ஜோதி அகவல், அட்டகம் முழுமையும் பாராயணமும் ஞாயிறு தோறும் சொற்பொழிவு, வினவிடை முதலியனவும் முறையாக நடைபெற்று வருகின்றன.

வள்ளலார் வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட திருநாட்களில் திருவிழாவும், அன்னதானமும், சிறப்புச் சொற்பொழிவுகளும் சங்க விதிகளின்படி நடைபெறுகின்றன. திருவருட்பாவின் சாரத்தை சிறுநூல்களாக வெளியிட்டு வழங்குவது சங்க நோக்கங்களில் ஒன்றாகும்.

சங்கத் தலைவர் திரு. பொன். கோவிந்தசுவாமி அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் சங்கத்தில் ஆற்றிய "வள்ளலாரும் வேதாந்தமும்" என்ற சொற்பொழிவை கேட்ட சன்மார்க்க அன்பர்கள் அதை நூல் வடிவமாக வெளியிடவேண்டுமென்று விழைந்தனர்.

தலைவர் திரு. பொன். கோவிந்தசுவாமி (ஓய்வு பெற்ற மலேசியா கல்வி அதிகாரி) அவர்கள் வேதாந்த சித்தாந்த சாத்திர ஆராய்ச்சியுடையவர். வள்ளலாரிடமும் திருவருட்பாவிலும் அதிக ஈடுபாடுடையவர். ஏற்கனவே 'சிவஞான போதம் மறை பொருள் விளக்கம்', 'பாவை எம்பாவையும் பள்ளி யெழுச்சியும்', 'கூட்டுப் பிரார்த்தனை பாமாலை' முதலியன வெளியிட்டுள்ளார்கள்,

Koviloor Digital Library

ஆகவே அவரது சொற்பொழிவை எல்லோரும் படித்துப் பயன்பெற வேண்டி, நூல் வடிவாக்கி வெளியிட்டுள்ளோம். ஆன்மீகத்தில் ஆர்வங்கொண்ட சன்மார்க்க அன்பர்கள் படித்துப் பயனடைவார்களாக. அடுத்து வரயிருப்பது 'வள்ளலாரும் சித்தாந்தமும்' என்பதாகும்.

துக்காராம் பஜனை மடம்
தெற்கு கவாத்தெரு; மஞ்சை நகர்
கடலூர் - 607001
1—11—76

உ. முத்துரங்கம்,
செயலாளர், சமரச சுத்த
சன்மார்க்க சங்கம், கடலூர்
பதிவு எண் 28/76

விண்ணப்பம்

எல்லாமுடைய அருட்பெருஞ்ஜோதி அற்புதக் கடவுளே! இது தொடங்கி எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடைகளாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும், வருணம், ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும் எங்கள் மனதில் பற்றா வண்ணம் அருள்செய்தல் வேண்டும்.

சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும், எவ்விடத்தும், எவ்விதத்தும், எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்வித்தருளல் வேண்டும்.

எல்லாமாகிய தனிப்பெருந் தலைமை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருட் பெருங் கருணைக்கு வந்தனம்! வந்தனம்!!

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம், இராமலிங்கம்

Koviloor Digital Library

உ

கடவுள் வாழ்த்து

முன்னவனே! யானை முகத்தவனே! முத்திநலம்
சொன்னவனே! தூயமெய்ச் சுகத்தவனே! மன்னவனே!
சிற்பரனே! ஐங்கரனே! செஞ்சடையஞ் சேகரனே!
தற்பரனே! நின்தாள் சரண். 1

எல்லாம் செயல்கூடும் என்னாணை—அம்பலத்தே
எல்லாம் வல்லான்தனையே ஏத்து. 2

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே
அன்பெனும் குடில்புகும் அரசே
அன்பெனும் வலைக்குள் படுபரம்பொருளே
அன்பெனும் கரத்து அமர் அமுதே
அன்பெனும் கடத்துள் அடங்கிடும் கடலே
அன்பெனும் உயிர் ஒளிர் அறிவே
அன்பெனும் அணுவுள் அமைந்த பேரொளியே
அன்புருவாம் பரசிவமே. 3

திருவிளங்க, சிவயோக சித்தியெலாம் விளங்க
சிவஞான நிலைவிளங்க, சிவானுபவம் விளங்க
தெருவிளங்கு திருத்தில்லை திருச்சிற்றம்பலத்தே
திருக்கூத்து விளங்க ஒளிசிறந்த திருவிளக்கே!
உருவிளங்க, உயிர் விளங்க, உணர்ச்சியது விளங்க
உலகமெலாம் விளங்க அருள் உதவு பெருந்தாயாம்
மருவிளங்கு குழல்வல்லி மகிழ்ந்து ஒருபால் விளங்க
வயங்கும் மணிப்பொது விளங்க வளர்ந்த சிவக்கொழுந்தே!!

இன்று வருமோ! நாளைக்கே வருமோ அல்லது மற்று
என்று வருமோ அறியேன் என்கோவே,—துன்றுமல
வெம்மாயை யற்று வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருக்கும் சுகம். 5

Koviloor Digital Library

சற்குரு துதி

அகத்தியனோ, வான்மீகியோ, ஆதிசேடன் தானோ
மகத்துவமாம் சம்பந்தவள்ளலோ—இகத்தில்
சச்சிதானந்தத்தின் தண்ணளியோ, யென்னென்பேன்
மெச்சுமதி இராம லிங்கவேள். 6

மருட்சமய வாதுகளும், மாமாலச் சடங்குகளும்
மண்ணைக் கௌவ
இருட்சாதி வேற்றுமைகள், இடர்செய்யும்
பிரிவினைகள் இரிந்து தேய
பொருட்செறிந்த மணிவாக்கும், பொதுநலஞ்செய்
புண்ணியமும் பூண்டெழுந்த
அருட்ஜோதி ராமலிங்கப் பெருமானின்
அடிமலர்கள் முடியில் வைப்பாம். 7

திருவருட்பா மகிமை

தண்ணீர் விளக்கெரித்த தன்மைபோல் மாந்தர்கள்தம்
உண்ணீர் சிவம் விளங்க ஓங்குவிக்கும் கண்மணியாம்
நங்கள் இராமலிங்கன் நல்லஅருட்பா முறையைத்
தங்கமுற மாணுதொழு. 8

பத்திவரும், பழவினைகள் பறந்தோடும், மூலப்பகுதி மாயும்[சாந்த
புத்திவரும், புலைகொலைகள் புறம்போகும், ஆனந்தம் பொங்கும்—
முத்திதரும், அழியா நன்னோக்கமுறும் முதுகடல்சூழ் உலகில் எல்லாச்
சித்திதரும் இராமலிங்கன்தன் அருட்பாவை சிந்திப்போர்க்கே. 9

கருணையிலா ஆட்சி கடுகிஒழிக,
அருள்நயந்த நன்மார்க்கர் ஆள்க—தெருள்நயந்த
நல்லோர் நினைத்த நலம்பெறுக, நன்று நினைந்து
எல்லோரும் வாழ்க இசைந்து. 10

Koviloor Digital Library

முன்னுரை

உயிர்க்கும், உலகிற்கும், இறைக்குமுள்ள தொடர்பைக் கூற வந்ததே சமயமாகும். சமயம், மதம், மார்க்கம் என்பன பரியாய நாமங்கள்; அவைகள் ஒன்றோடொன்று இணைந்துள்ளன.

சமயம் என்ற சொல் 'சம்' என்ற உபசருக்கத்தை முதலில் கொண்டு உடன்போதல், உடன்படல், நியமித்தல் என்ற பொருளையும் 'அய்' என்ற நடுநிலை போதல், உணர்தல் என்ற பொருளையும், 'அ' என்ற விகுதி தொழிற்பொருளும், கருவிப் பொருளும், செயப்படு பொருளும் குறித்து நின்றன.

ஆதலால் சமயம் என்பது நியமித்தலும், நியமித்தற் கருவியும், நியமிக்கப்பட்டதுமாம். நியமித்தல் என்பது வரையறுத்தலும், துணிதலும், உடன்படுதலும், விதித்தலும், கட்டுதலும், பக்குவப்படுத்தலுமாம்.

மதம் என்பது கருதப்பட்டதும், உடன்படப் பட்டதும், கோளுமாம். கோள் என்றால் கொள்கை, துணிபு என்பதாம். 'மந்' என்ற பகுதியினடியாகப் பிறந்து அறிதல், கருதல், உடன் படல் என்ற பொருளைக்கொண்டது.

மார்க்கம் என்பது தேடுதற் கருவியும், சுத்தியாக்குதற் கருவியுமாம். 'மார்க்' என்ற பகுதி தேடுதல், சுத்தியாக்கல் என்பதாம். வழி என்றும் பொருள்படும்.

பாரத நாட்டின் சமயம் சநாதன தர்மமாகிய இந்து சமய மாகும். அதன் மதங்கள் சைவம், வைஷ்ணவம், காணாபத்தியம், கௌமாரம், சாக்தம், ஆக்நேயம்; நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்சம், வேதாந்தம்; வேதாந்தம், சித்தாந்தம், கலாந்தம், யோகாந்தம், போதாந்தம், நாதாந்தம்; துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம்; வைஷ்ணவத்தில் வடகலை, தென்கலை; சைவத்தில் வீரசைவம் முதலான அநேக உட்பிரிவுகள் முதலாக பல மதங்கள் இந்து சமயத்தில் உள்ளன. மார்க்கங்கள்: கர்மமார்க்கம், பக்திமார்க்கம், யோகமார்க்கம், ஞானமார்க்கம்; சரியை, கிரியை, யோகம் ஞானமார்க்கங்கள்; தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம்,

Koviloor Digital Library

சித்தர் மார்க்கங்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக சமரச சுத்த சன்மார்க்கம் முதலியனவாம்.

பௌத்தம், சமணம், கிருஸ்துவம், மகம்மதியம் முதலான சமயங்களிலும் இவ்வாறே பல மதங்கள், மார்க்கங்கள் இருக்கின்றன.

சமயங்கள் புராணம் (Mythology), கிரியை அல்லது சடங்குகள் (Rituals & Sacraments), தத்துவம் (Philosophy) என்ற முப்பகுதிகளைக்கொண்டது. புராணங்களும், சடங்குகளும் சமயத்திற்குச் சமயம், தேசத்திற்குத் தேசம் மாறுபட்டு வேறுபட்டிருக்கும். ஆனால் அவற்றின் அடிப்படை தத்துவ சாத்திரங்கள் எல்லா சமயங்களுக்கும் பொதுவானது.

நமது சனாதன தர்மமாகிய இந்து சமயம் நான்கு வேதங்கள் அஸ்திவாரமாகவும், ஆகமங்கள் சுவர்களாகவும், ஸ்மிருதிகள் கூரையாகவும், புராண இதிகாசங்கள் கதவுகளாகவும், பன்னிரு திருமுறைகள், நாலாயிர திவ்ய பிரபந்தங்கள், பதினான்கு மெய் கண்ட சாத்திரங்கள், தாயுமானர், திருப்புகழ், பிரபுலிங்கலீலை, சித்தர், பட்டினத்தார் முதலியன பல பலகணிகளாகவும் அமைந்த ஓர் ஒப்புயர்வற்ற கட்டுக்கோப்பான சமயமாகும்.

அகத்தே கறுத்து புறத்தே வெளுத்திருந்த மக்களைத் திருத்தி சன்மார்க்கத்தில் அடைவித்திடவும், வேறுபடும் மாறுபடும் சமயங்களை சமரசப்படுத்தவும், உலக மக்களிடை ஆன்ம நேய ஒருமைப்பாட்டை வளர்த்திடவும், உலகை உய்விக்கவும் 19-ம் நூற்றாண்டின் இறுதியில் அவதரித்த சித்தபுருடராகிய திருவருட் பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் மேலே சொல்லப்பட்ட வேதாகம சாத்திர தோத்திரங்களை யெல்லாம் காய்ச்சிக் கடைந்தெடுத்து அமுதமாக்கி பல்வேறு பக்குவ நிலையில் உள்ள ஆன்மாக்களுக்கு உதவுமாறு தாம் அருளிய திருவருட்பாவில் பொதிந்து வைத்துள்ளார்கள்.

வள்ளல்பெருமான் பொதுவாக உலக மக்கட்கும், சிறப்பாகத் தமிழ் மக்கட்கும் வைத்துச் சென்ற கருவூலங்களாவன :—

1. 'அருட்பெருஞ்ஜோதி—தனிப்பெருங்கருணை' என்ற மகா மந்திரமும்; 2. 'பசித்திரு-தனித்திரு-விழித்திரு' என்ற மகா வாக்

Koviloor Digital Library

கியமும்; 3. 'ஏமசித்தி, தத்தவ நிக்கிரகம், சாகாக்கலை, சோகம் பாவனை' என்ற புருடார்த்தம் நான்கும்; 4. 'இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம், சீவ ஒழுக்கம், ஆன்ம ஒழுக்கம்' என்ற ஞான சாதனங்கள் நான்கும், 5. 'சாகா தத்தலை, வேகாக்கால், போகாப் புனல்' என்ற தத்துவத்தையும், 6. சத்விசாரமும், தத்துவ ஆராய்ச்சியும் 7. மோக்ஷவீட்டின் ஒரே திறவு கோலான ஜீவ காருண்ய ஒழுக்கமும், மகுடமாக சமரச சுத்த சன்மார்க்கமு மாகும். இவற்றின் கண்கொண்டு தான் அவர் அருளிய அருட் பாவை ஆராய்தல் வேண்டும். வள்ளலாரின் இயக்கம் ஒரு வெறும் மூடநம்பிக்கையான பஜனை கோஷ்டியாக மாறிவிடலாகாது.

வள்ளல் பெருமானின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள்

1. அவதாரம்: சுபானு ஞூ புரட்டாசி மீ 21ௗ (5-10-1823) ஆதிவாரம் சித்திரை நட்சத்திரம்.
2. தோன்றிய ஊர்: தமிழ்நாடு; சிதம்பரம் வட்டம்; வட லூரையடுத்த மருதூர் என்ற கிராமம்.
3. பிறந்த குலம்: சைவ வேளாளர் குலம். காருணீகர் மரபு, சித்திரகுப்தர் கோத்திரம்,
4. பெற்றோர்கள்: பிதா - இராமைய பிள்ளை. தாய் - சின்னம்மையார்.
5. உடன் பிறந்தோர்: சகோதரர்கள் - சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை சகோதரிகள்; சுந்தரம் அம்மை, உண்ணாமுலை அம்மை.
6. நிறுவிய நிலையங்கள்: உடல் வளர்ச்சிக்கு-சத்திய தரும சாலை, சித்த வைத்திய சாலை; உயிர் வளர்ச்சிக்கு சத்திய ஞான சபை, சமரச வேதபாடசாலை, சித்திவளாகத் திருமாளிகை
7. அருளிய நூல்: திருவருட்பா - ஆறு திருமுறைகள்.
8. ஆரம்பித்த இயக்கம்: சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்.
9. சித்துக்கள்: ஆடிய அட்டமா சித்துக்கள் கணக்கில.
10. திருவுருக்கரந்தல்: ஸ்ரீமுக ஆண்டு தைத் திங்கள் 19-ம் நாள் சுக்கிரவாரம் பூசம் நட்சத்திரம் (30-1-1874)

Koviloor Digital Library

1867-ல் அய்யா அவர்கள் நிருவிய சத்திய தருமசாலையில் அன்றிலிருந்து இன்று வரை இடையறாது தினந்தோறும் அற்றார் அழிபசி தீர்க்க அன்னதானம் செய்யப்பெற்று வருகின்றது.

1870-ல் நிருவப்பெற்ற சித்திவளாகத் திருமாளிகையில் அய்யா அவர்கள் அன்று ஏற்றிய திருவிளக்கு நாளது வரை அணையாத்தீபமாக இராப்பகல் சுடர்விட்டுக்கொண்டிருக்கின்றது.

1872-ல் அய்யா அவர்களால் ஸ்தாபிக்கப்பெற்ற சத்திய ஞான சபையில் பிரதி வருடமும் தை மாதம் பௌர்ணமி பூசம் நாளன்று ஏழுதிரைகளும் நீக்கி ஜோதி தரிசனம் காட்டப்பெறுகின்றது.

மாத பூசத்தன்றும் ஆறு திரைகள் மட்டும் நீக்கப்பெற்று ஜோதி தரிசனம நடைபெறுகின்றது.

எல்லா சாதி சமய மக்களும் ஆயிரக்கணக்கில் வந்து மகா மந்திரத்தை ஓதி, ஜோதி தரிசனம் கண்டு, தொழுது வணங்கி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன் அருள்பெற்று எண்ணிய எண்ணியாங்கு பயன் எய்துகின்றனர்.

மக்கள் திருவருட் பிரகாச வள்ளலாரைப் போற்றித் தொழுது, அவர் அருளிய திருவருட் பாவை ஓதி, ஜீவகாருண்ய ஒழுக்க சீலர்களாய் அவர் காட்டிய வழிகளைக் கடைப்பிடித்து நின்று அய்யா அவர்களின் ஆசீர்வாதத்தையும், அருட்பெருஞ் ஜோதி ஆண்டவன் அருளையும் பெற்று இம்மை மறுமை பயன்களைப் பெறுய்வார்களென்ற நம்பிக்கையுடன் அய்யா அவர்களின் 153வது திருஅவதார திருநாளன்று இந்நூலை ஆரம்பித்து எனது 76-ம் ஆண்டு நிறைவு நினைவு மலராக இதை வெளியிடுகின்றேன்

15-B மேற்கு கவரைத் தெரு
மஞ்சகுப்பம், கடலூர் 607001
15-10-1976

திரு. பொன். கோவிந்தசுவாமி
வள்ளலார் அடிமை

Koviloor Digital Library

ஓம்
சிவமயம்

அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

வள்ளலாரும் வேதாந்தமும்

தோற்றுவாய்

தமிழ் சமய நூல்களைத் தோத்திரம் எனவும், சாத்திரம் எனவும் இருவகையாக வகுத்துள்ளனர். கற்பனையினால் உருவாக்கப்பெற்ற இறைவனின் நடராஜர் விக்கிரகம் போன்ற உருவத்திருமேனிகளையும், அவனது அனந்த கல்யாண குணங்களையும், திருவிளையாடல்களையும் போற்றிப் புகழ்தலும், நெஞ்சறிவுறுத்தலும், அவனை நோக்கி குறையிரத்தலும். நிந்தாஸ்துதியும் தோத்திரங்களாகும். நாயன்மார்கள் பாடியருளிய பன்னிரு திருமுறைகளும், ஆழ்வாராதியர்கள் அருளிய நாலாயிர திவ்ய பிரபந்தங்களும் தோத்திரத்தின் பாற்படும். தோத்திரங்களை பாடியருளியவர்கள் சமயாச்சாரியர்களாவர்.

இறைவனின் சொருப, தடத்த இலக்கணங்களையும், இறை உயிர் உலகம் இவற்றின் வரலாற்றுக்களையும், இவற்றிற்கிடையேயான சம்பந்தா சம்பந்தங்களைக் கூற வந்த நூல்கள் சாத்திரங்களாகும். மெய்கண்டார் முதலானோர் அருளிய பதினான்கு நூல்களும், திருமந்திரம், பிரபுலிங்கலீலை, கீதை முதலியன சாத்திரங்கள் பாற்படும். மெய்கண்ட சாத்திரங்களை அருளியவர்கள் சந்தானச்சாரியர்கள் என அழைக்கப்படுவர்.

தோத்திரத்தைப் புகழ் நூல் என்றும், சாத்திரத்தைப் பொருள் நூல் என்றும் கூறுவர் தத்துவ சாத்திரங்கள் எல்லாச் சமயங்களுக்கும் பொதுமறையாகும். இறைவனின் பொருள் நூல்களே உயிர்கட்கு உறுதுணையான ஞானசாத்திரங்களாகும் அதனாலன்றோ பொய்யாமொழிப் புலவரான திருவள்ளுவரும்,

> " இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
> பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு "

என அருளிப்போந்தனர்.

உலகை உய்விக்க அவதரித்த சித்த புருடராகிய வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் தாம் அருளிய திருவருட்பாவில் திருவாசகத்தைப் போன்று தோத்திரங்களையும், திருமந்திரம் போன்று சாத்திரங்களையும், வேதாகமங்கள் போன்று கருமகாண்ட, ஞானகாண்டக் கருத்துக்களையும் பொழிந்து வைத்துள்ளனர். அப்படிப்பட்ட சாத்திரப் பகுதிகளில் ஒன்றுதான் அவர் அருளிய திருவருட்பாவின் முதல் திருமுறையில் ஐந்தாவது பதிகமாகிய "மகாதேவமாலை" யாகும்.

Koviloor Digital Library

முதல் திருமுறையில் மொத்தம் எட்டு பதிகங்கள் உள. அவற்றில் முதல் பதிகமாகிய "திருவடி புகழ்ச்சி" இறைவனின் சத்துத் தன்மையையும், இடையிலுள்ள "மகாதேவமாலை" "சித்து"த் தன்மையையும், கடைப்பதிகமாகிய "இங்கிதமாலை" அவனின் "ஆனந்த"த் தன்மையையும் உணர்த்த வந்த பதிகங்கள் என்று அறிந்தோர் அறைகுவர்.

இந்த மகாதேவமாலை பதிகத்தில் வள்ளல் பெருமான் வேதாந்தம், சித்தாந்தம்; கலாந்தம், யோகாந்தம்; நாதாந்தம், போதாந்தம் என்ற ஆறு அந்தங்களின் சாராம்சங்களைப் பிழிந்தெடுத்து ஞானமிர்தமாக வழங்கியுள்ளார்கள். இது கடவுள் வாழ்த்துடன் 101 பாக்களைக் கொண்டது. இதன் ஏழாவது பாடலில் வேதாந்த சாத்திரக் கருத்துக்களையெல்லாம் பிழிந்தெடுத்துச் சுருங்கச் சொல்லி விளங்க வைத்துள்ளார்கள்.

வேதாந்தம் என்றால் வேதத்தின் அந்தம் அதாவது கடைப் பகுதி என்பதாகும். வேதம் என்பது "வித்" என்ற பகுதியினடியாகத் தோன்றி "அறிவு" எனும் பொருள் குறித்து நின்ற பதமாகும். அறிவுக்குக் கருவியாக யிருப்பது வேதம். அது உயிர் உலகையும், இறைவனையும் அறிதற்கு வழிகாட்டித் துணை புரிகின்றது. வேதங்கள் இருக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்காகும். அவை பிராமணம், சம்ஹிதை, ஆரண்யகம் என்ற முப்பகுதிகளை யுடையன. பிராமணம் கிரியைகளையும், சம்ஹிதை, மந்திரங்களையும், ஆரண்யகம் ஞானபாதமாகிய உபனிடதங்களையும் கூறுவனவாகும்.

உபனிடதங்கள் வேதங்களின் அந்தத்தில் இருப்பதால் "வேதாந்தம்" எனவும், வனங்களில் தனித்திருந்து ஆராய வேண்டிய விடயமாகையின் "ஆரணம்" எனவும், பல பரம ரகசியங்களைத் தன்னுள் மறைத்து வைத்திருப்பதால் "மறை" என்றும், இசையோடு ஓதப்படுவதால் "சுருதி" என்றும் வழங்கப்படுகின்றது. உபனிடதங்களின் தொகை நூற்றெட்டாகும்; அவை வருமாறு:—ரிக்வேதத்தில்-10, யஜுர் வேதத்தில்-51, சாமவேதத்தில்-16, அதர்வணவேதத்தில்-31 ஆகமொத்தம்108.

வேதாந்த ஞானக் கருத்துக்களை கூறவந்த நூல்கள் உபநிடதம், கீதை, பிரம்மசூத்திரம் ஆகிய மூன்றுமாம். ஆதலால் அவற்றிற்கு "பிரஸ்தாத்ரியம்" என்ற பெயர் வழங்குகின்றது. இவற்றையெல்லாம் பிழிந்தெடுத்த சாரம்தான் மகாதேவமாலையின் ஏழாவது பாடலாகும்.

Koviloor Digital Library

வள்ளலாரும் வேதாங்கமும்

நூல்

இந்தியமாய்[1], கரணாதி[2] அனைத்தும் ஆகி
இயல் புருடனாய்[3], காலபரமும்[4] ஆகி
பந்தம் அற்ற வியோமம்[5] ஆய், பரமாய்,[6] அப்பால்
பரம்பரம்[7] ஆய், விசுவம்[8] உண்ட பான்மையாகி
வந்த உபசாந்தம்[9] அதுவாய், மவுனம்[10] ஆகி
மகாமவுன[11] நிலையாகி வயங்கா நின்ற
அந்தம்இல் தோம்பதமாய்,[12] தத்பதமாய்,[13] ஒன்றும்
அசிபதமாய்,[14] அதீதமாய்[15] அமர்ந்த தேவே.

—(மகாதேவமாலை)

இப்பாட்டில் பதினைந்து தத்துவப் பொருட்கள் பொதிந்து வைக்கப்பட்டுள்ளன. அவையாவன :

1. இந்திரியம்	6. பரம்	11. மகாமவுனம்
2. கரணம்	7. பரம்பரம்	12. தொம்பதம்
3. புருடன்	8. விசுவம் உண்ட	13. தத் பதம்
4. காலபரம்	9. உபசாந்தம்	14. அசிபதம்
5. வியோமம்	10. மவுனம்	15. அதீதம்

இப் பதினைந்து தத்துவப் பொருட்களைப் பற்றி நாம் அறிந்தால் வேதாந்தத்தின் கருத்துக்களை ஒருவாறு நாம் அறிந்தவர்களாவோம்.

வேதாந்த தத்துவத்தின்படி தத்துவ தோற்றம் வருமாறு: சுத்தப் பிரம்மமாய் இருக்கின்ற சர்வ சாக்ஷியினிடத்தே அக்கினியில் சூடுபோல் அபின்னமாக ஒரு சத்தி உண்டு. அந்த சத்தி

Koviloor Digital Library

அவ்வதீதப் பிரம்மத்தில் அடங்கி யிருக்கும்போது அதற்கு சுத்த பிரம்மம் என்று பெயர். அந்த சத்தி விசிரம்பித்து சுத்தபிரம் மத்தை வியாபிக்கும்போது அந்த சுத்த பிரம்மம் பரை வியா பகத்துள் இருக்கிறபடியால் அதற்கு சுத்த பிரம்மம் என்ற பெயர் போய் பரப்பிரம்மம் என்ற பெயர் உண்டாயிற்று. அபின்னசத்தியும் பின்ன (மாயா) சத்தியாயிற்று.


இந்த மாயை சுத்த மாயை (விந்து), சுத்தாசுத்த மாயை (மோகினி), அசுத்த மாயை (மான்) அல்லது மூலப்பிரகிருதி மாயை என்ற முப்பகுதியாய் உள்ளது. இவை பிரம்மத்திற்கு முறையே காரண சரீரம், சூக்கும சரீரம், தூல சரீரம் என்ற மூன்று உடலாய் அமைந்தன. சுத்த மாயையிலிருந்து பாழும், பரத்திலிருந்து வியோமமும், வியோமத்திலிருந்து காலபாழும், தோன்றின. சுத்தாசுத்த மாயையிலிருந்து புருடன் தோன் றிற்று.

அசுத்த மாயையாகிய மூலப்பிரகிருதி சத்துவம், ராஜதம், தாமசம் என்ற முக்குணங்களையுடையது. அம்முக்குணங்களும் வெளிப்படாமல் சம நிலையில் இருக்கும்போது அவியத்தம் அல்லது அவிகிர்தம் எனப்படும். இந்த மாயைக்கு பிரம்மத்தி னுடைய சந்நிதானத்தில் புருட சமூகத்தில் ஸ்திரீக்கு இன்பம் சனித்தாற்போல் சலனமேற்பட்டு சத்துவ, ரஜஸ், தமோ குணங்கள் வியத்தமாகி வெளிப்பட்டு இப்பிரபஞ்சம் உரு வெடுத்து தோன்றலாயிற்று. எவ்வாறெனின் அந்த விகிர்த சத்துவகுண மாயையிலிருந்து மனம், புத்தி, அகங்காரம், சித்தம் என்ற அந்தக்கரணங்கள் நான்கும்; மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும் தோன்றின.

ரஜோகுண மாயையிலிருந்து வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ற கர்மேந்திரியங்கள் ஐந்தும் தோன்றின.

தமோகுண மாயையிலிருந்து சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற தன்மாத்திரைகள் ஐந்தும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற பூதங்கள் ஐந்தும் தோன்றின. இவற்றின் கூட்டமே சேதனசேதனமாகிய இப்பிரபஞ்சமாகும். அவற்றை கீழே கொடுத்துள்ள அட்டவணையில் காண்க:

Koviloor Digital Library



Koviloor Digital Library

மேற்படி அட்டவணையிலிருந்து இப்பாடலில் சொல்லப் பட்ட இந்திரியங்கள், அந்தக்கரணங்கள், புருடன், காலபரம், வியோமம், பரம், பரம்பரம் என்ற தத்துவத் தோற்றங்களைக் காணலாகும்.

வேதாந்த தத்துவங்கள் 28

வேதாந்த சாத்திரப்படி தத்துவங்கள் இருபத்தெட்டாகும். அவை யாவன:

1.	ஞானேந்திரியம் (மெய், வாய், கண், மூக்கு, செவி)	5
2.	ஞானேந்திரிய விடயம் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்)	5
3.	கர்மேந்திரியம் (வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம்)	5
4.	கர்மேந்திரிய விடயம் (வசனம், கமனம், தானம், விசர்க்கம், ஆனந்தம்)	5
5.	அந்தக்கரணம் (மனம், புத்தி, அகங்காரம், சித்தம்)	4
	மொத்தம்	24
6.	புருடன் (7) காலபரம் (8) வியோமம் (9) பரம் ஆக	4
	ஆகமொத்தம்	28

மேற்படி 28 தத்துவங்களில் முதல் 24 தத்துவங்கள் சகள வடிவான அசித்துருவ தத்துவங்கள் எனவும், பின் நான்கு தத்துவங்கள் நிஷ்கள வடிவான சித்துரு தத்துவங்கள் எனவும் இருவகைப்படும்.

இந்த 28 தத்துவங்களில் (1) சகம் (பாசம்), (2) சீவன் (பசு), (3) பரம் (பதி) ஆகிய முப்பொருள்களும் அடங்கும். எவ்வாறெனின் அசித்துருவ தத்துவங்கள் 24-ம் சகம்; சித்துருவ தத்துவங்கள் 4ல் வியோமம், காலபரம், புருடன் மூன்றும் சீவன்; நான்காவது பரம் ஆகும்.

இவ்வாறு இப்பாட்டிலுள்ள (1) இந்திரியம் (2) கரணம் (3) புருடன், (4) காலபரம், (5) வியோமம், (6) பரம், (7) பரம்

Koviloor Digital Library

பரம் ஆகிய ஏழு தத்துவங்களின் தோற்றத்தையும் பார்த்தோம். அவற்றின் விளக்கம் வருமாறு :—

1. இந்திரியம் : பாட்டு முதலடியின் கடையிலுள்ள "அனைத்தும்'' என்றதை இந்திரியம் அனைத்தும் என்று கூட்டிக் கொள்ளவும். அனைத்தும் என்ற விடத்து ஞானேந்திரியங்கள்- 5, அவற்றின் விடயங்கள் 5, கர்மேந்திரியங்கள் 5, அவற்றின் தொழில்கள் 5 ஆக 20-ம் அடங்கும்.

2. கரணம் : அனைத்தும் என்றபோது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் நான்குமாகும்.

இந்திரியங்கள் புறக்கரணம்; மனம் முதலியன அந்தக் கரணம்; கரணம் என்ருல் கருவி என்று பொருள். இந்திரியங் களும் அந்தக்கரணங்களும் மான் எனப்படும் அசுத்த (மூலப் பிரகிருதி) மாயையின் தோற்றம்.

3. புருடன் : புருட தத்துவம் மோகினி என்ற சுத்தாசுத்த மாயையின் தோற்றம். புடனுக்கு கூடஸ்தன் அலலது பிரத்யே காதமா என்ற பெயர்களும் உள. புருடன் இறைவனின் அம்ஸம்; இறைவன் அக்னிச் சுவாலை யென்ருல் புருடன் அச்சுடரி லிருந்து தோன்றிய அக்னிப் பொறிகளாகும.

புருடனுக்கு முதன் முதலில் ஏற்பட்ட சரீரம் (1) கலை (செயல்), (2) வித்தை (அறிவு), (3) அராகம் (இச்சை), (4) காலம், (5) நியதி ஆகிய பஞ்ச கஞ்சுக சட்டையாகும்.

இந்தப் புருடனின் சாயைக்கு (அம்ஸம்) "ஆன்மா" என்று பெயர். இதற்கு தேகம் தன்மாத்திரை 5, மனம, புத்தி, அகங் காரம் 3 ஆக எட்டும கூடிய புரியட்டக சரீரமாம.

ஆனமாவின சாயைக்கு (அமஸம்) "சீவன்'' என்று பெயர். இதற்கு சரீரம் மனம வாக்கு காயம் என்ற தூல, சூக்கும, காரண சரீரங்களாகும்.

பதி, பாசம்போல் பசுவும் அநாதி நித்தியப்பொருள். அதனல்தான புருடனுக்கு இயல்புருடன என்று இங்கு அடை மொழி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த "இயல்'' என்ற அடை மொழியை காலபரன, முதலானவற்றின் முன்பும் கூட்டிப் பொருள் கொள்க.

4. காலபரம் : புருடனுக்கு மேற்பட்ட தத்துவம் கால தத்துவமாகும். இந்து மதத்தின ஒரு சாராராகிய காலேஸ்வர

Koviloor Digital Library

வாதிகள் என்பவர்கள் காலபரனையே கடவுளாக வழிபடு கின்றனர். இப்பிரபஞ்சம் காலத்தில் தோன்றி, காலத்திலே நிலைத்து, காலத்தினுல் மறைவதால் காலனே கடவுள் என்றும், அதற்கு மேற்பட்ட கடவுள் ஒருவர் இல்லை என்ற கொள்கையை யுடையவர்கள்.

காலம் ஒரு கடவுள் என்பதற்கு கைவல்யத்தில் பிரபஞ்ச உற்பத்தியை கூறவந்த இடத்து,

" அதுதான் எப்படியென்றக்கால் அநாதியே சீவரெல்லாம்
பொதுவான சுழுத்திபோல பொருந்தும்—அவ்வியத்தம் தன்னில்
இது காலதத்துவபேர் ஈஸன் உட்பார்வையாலே
முதுமூல சுபாவம் விட்டு முக்குணம் வியத்தமாமே "

(கைவல்யம்)

என்று கூறப்பட்டுள்ளது.

"காலமே கடவுள்" என்ற கொள்கை சைவ சித்தாந்தத் திற்கு உடன்பாடல்ல. ஆனுல் பிரபஞ்ச தோற்றத்திற்கு காலம் ஒரு துணைக்காரணம் எனறு கூறுகிறது. பிரபஞ்ச தோற்றத் திற்கு காரணங்கள் மூன்று உள்ளன. அவையாவன :

	காரணம்	உபமானம்	உபமேயம்
1.	நிமித்த காரணம்	குயவன்	இறைவன்
2.	முதற் காரணம்	மண்	மாயை
3.	துணைக் காரணம்	தண்டு, சக்கரம்.	சிற்சத்தி, காலபரம்

இதை மெய்கண்ட சாத்திரம் சிவஞானசித்தியில் கீழ்க் கண்டவாறு கூறப்பட்டுள்ளது :—

காலமே கடவுளாகக் கண்டனம் தொழிற்கு என்னில்
காலமோ அறிவின்றுகும்; ஆயினும் காரியங்கள்
காலமே தரக்காண்டும்; காரணன் விதியினுக்கு
காலமும் கடவுள் ஏவலால் துணைக்காரணங் காண்.

(சித்தியார்)

காலனை யமனுக கற்பனை செய்யப்பட்டுள்ளது. கடவுள் காலகாலன்.

காலதத்துவம் கணம், நாழிகை, நாள், வாரம், பட்சம், திங்கள், அயனம், ஆண்டு, யுகம், கற்பம், பிரளயம் முதலான பலப் பிரிவினைகளை யுடைத்து.

Koviloor Digital Library

காலபரமும் அதற்கு மேற்பட்ட தத்துவங்களும் விந்து என்ற சுத்த மாயையின் தோற்றமாகும்.

5. வியோமம்: காலபரத்திற்கு மேற்பட்ட தத்துவம் வியோம தத்துவமாகும். வியோமம் என்றால் ஆகாயம். இது பஞ்ச பூதங்களில் ஒன்றாய ஆகாசம் அன்று. இங்கு ஆகாயம் என்பது விண், அனந்தம் அல்லது வெளி (Space) என்ற பொருள் படும். இதை வள்ளலார் வெளி, பரவெளி, பராபரவெளி, பரம்பரவெளி என பலதிறம்படக் கூறுகின்றார். இவ்வெளி அண்ட சராசரங்கள் நிலைத்திருக்க இடங்கொடுத்துக் கொண்டிருக்கிறது. இருந்தாலும் தாமரையிலைத் தண்ணீர்போல் அவற்றோடு தோயாது; ஒட்டாது. ஆகவே இதை பந்தமற்ற வியோமம் என்று வள்ளலார் அடைமொழி கொடுத்துள்ளார்கள். சில உபனிடதங்கள் ஆகாயமே பிரம்மம் என்று கூறுகின்றன.

"விண்ணாதி பூதமெல்லாம் தன்னகத்தே
அடக்கி வெறும் வெளியாய்"

எனக் கூறப்பட்டுள்ளது.

6. பரம்: வியோம தத்துவத்திற்கு மேல் பரதத்துவம். பரம் என்பது பிரம்மம். இது பரம்பரத்தின் அவதரம்.

7. பரம்பரம்: பரதத்துவத்திற்கு மேல் பரம்பர தத்துவம். பரம்பரம் என்பது பரப்பிரம்மம். இது சுத்த பிரம்மத்தின் அவதரம்.

இதுவரை இப்பாட்டிலுள்ள "இந்தியம்" முதல் "பரம் பரம்" வரையிலான ஏழு பதங்களின் தத்துவக் கருத்துக்களைப் பற்றி பார்த்தோம். இனி "விசுவம்" முதல் "அசிபதம்" வரையிலான ஏழு பதங்களின் தத்துவக் கருத்துக்களையும் "தத்துவமசி" என்ற மகா வாக்கியத்தைப் பற்றி ஆராயும்போது பார்ப்போம்.

மகாவாக்கியம்

வேதங்கள் நான்கிலும் ஒவ்வொரு வேதத்திலும் குறிப்பிட்ட ஒரு உபனிடத்தில் ஒரு வாக்கியமாக நான்கு வாக்கியங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை வருமாறு:

Koviloor Digital Library

வேதம்	உபனிடதம்	வாக்கியம்
1. ரிக்வேதம்	ஐதரேயம்	பிரஞ்ஞானம் பிரம்மம் (அறிவே பிரம்மம்)
2. யஜுர்வேதம்	பிரஹதாரண்யம்	அகம் பிரம்மாஸ்மி (உள்ளமே பிரம்மம்)
3. சாமவேதம்	சாந்தோக்கியம்	தத்துவமசி (அது நீயாய் இருக்கிறாய்)
4. அதர்வணவேதம்	மாண்டூக்யம்	அயம் ஆத்மா (ஆத்மாவே பிரம்மம்)

இவ்வாக்கியங்களே வேதாகமங்களின் முடிந்த முடிபாகும். இவற்றில் சாமவேதத்தின் சாந்தோக்யோபனிடத்திலுள்ள "தத்துவமசி" என்ற வாக்கியமே தலைசிறந்த மகாவாக்கியமாகும்.

மகாவாக்கியங்களை ஆராய்வதில் சில வழிமுறைப்படிகளை ஆன்றோர்கள் வகுத்துள்ளனர். அவை யாவன :—(1) சிரவணம், (2) மனனம், (3) நிதித்யாசனம் என்ற மூன்று படிகளாம். சிரவணமாவது வேதாகமப் பொருட்களை மெய்ஞானக் குருவினிடம் கேட்டு அறிவது; மனனமாவது ஆசாரியரிடம் கேட்டவற்றை சிந்தித்துப் பார்த்தல்; நிதித்தியாசனமாவது சிந்தித்துத் தெளிந்தவற்றை அநுபவ வாயிலாக உணர்தல். மகாவாக்கியத்தின் பதங்கள் ஒவ்வொன்றிற்கும் இந்த மூன்று படிகள் உள. அவற்றை விரிந்த நூல்களில் காண்க.

இந்த மூன்று படிமுறைகளையே சித்தாந்த பரிபாஷையில் (1) கற்றல், (2) கேட்டல், (3) சிந்தித்தல், (4) தெளிதல், (5) நிட்டை கூடுதல் என ஐந்தாக விரித்துக் கூறப்பட்டுள்ளன.

மகாவாக்கியத்தின் இலக்கணம்

மகாவாக்கியத்தின் இலக்கணம் நான்காகும். அவை (1) வர்ணம், (2) பதம், (3) பதார்த்தம், (4) இலக்கணை என்பவைகளாகும். அவையின் பிரிவுகள் :—வர்ணம் 4, பதம் 3, பதார்த்தம் 3, இலக்கணை 3, என்பவைகளாம்.

1. வர்ணம் நான்காவன :—(1) சத்தியம் (சத்து), (2) ஞானம் (சித்து), (3) ஆனந்தம், (4) அனந்தம் (வெளி) என்பவையாம்.

Koviloor Digital Library

2. பதம் மூன்றாவன :—(1) தத்பதம், (2) தொம்பதம், (3) அசிபதம் என்பவையாம்.

3 பதார்த்தம் மூன்று ஆவன :—பதத்திற்கு அர்த்தம் 1 "தத்" என்றால் அது, (2) "துவம்" என்றால், நீ (3) அசி என்றால் இருக்கின்றாய் என்பதாம். இவை முறையே பரம், சீவன், ஐக்கியப் பொருளாகிய சிவம் ஆகிய மூன்றையும் உணர்த்தி நின்றது.

4. இலக்கணை மூன்றாவன :—(1) சம்சர்க்க வாக்கியம், (2) விசிட்ட வாக்கியம், (3) அகண்ட வாக்கியம் என்பனவாம்.

மகா வாக்கியம் வைப்பு முறை

இப்பாட்டில் "தத்வமசி" என்ற மகாவாக்கியத்தின் வைப்பு முறையை நாம் கவனிக்கவேண்டும். இதை "தத்பதம்", "தொம்பதம்", "அசிபதம்" என்று சொல்வதற்கு பதிலாக வள்ளலார் தொம்பதத்தை முதலில் வைத்து "துவம்தத்அசி" என்று முறைப்படுத்தி அமைத்துள்ளார். "தத்வமசி" என்றால் அது நீயாய் இருக்கிறாய் என்பது பொருள். "துவம்தத்அசி" என்றால் நீ அதுவாய் இருக்கின்றாய் என்பது பொருள். இரண்டிற்குமுள்ள நுட்பமான கருத்து வேறுபாடு ஆழ்ந்து ஆலோசிக்கத்தக்கது. முன்னது கேவலாத்விதம் என்ற ஏகான்மவாதமாகும்; பின்னது சுத்தாத்விதம்.

மேலும் தத்பதத்தை முன் சொல்லாமல் தொம்பதத்தை முதலில் சொன்னது எதனால் எனின் நீ என்ற பதார்த்தமாகிய சீவன் நிர்விகாரியாய் சித்துருவாய் இருந்தும் அதை அறியாமல் சடத்தை தான் என்று அபிமானித்திருப்பதால், இந்த சடம் (உடல்) நீயல்லவென்று விளக்கிப் போதிப்பதற்காக அது நீ ஆனாய் என்றதை நீ அது ஆனாய் என்று "தத்வமசி" என்ற வாக்கியத்தை "துவம்தத்அசி" யென்று மாற்றி அமைக்கப்படலாயிற்று.

மற்றும் தூலாருந்ததி நியாயம் பற்றி காணப்பட்ட உலகைக் கொண்டுதான் காணப்படாத கடவுளை அறியவேண்டும். தன்னை அறிந்தவனே தலைவனை அறிவான்.

தாலத்தின் மரங்கள் காட்டித் தனிப்பிறை காட்டுவார்போல்
ஆலத்தின் உடுக்கள்காட்டி அருந்ததி காட்டுவார்போல்
தூலத்தை முன்புகாட்டி சூக்கும சொரூபமான
மூலத்தைப் பின்புகாட்ட முனிவரர் தொடங்கினாரே.

(கைவல்யம்)

Koviloor Digital Library

மகாவாக்கியப் பதங்கள்

1. தோம்பதம்: தொம்பதம் என்பது "நீ" என்ற சீவன். இந்த சீவனுக்கு உபாதிகள் ஏழு; அவை காரிய உபாதிகள் எனப்படும். உபாதியென்றால் தடை அல்லது திரைகளாம். இவை சீவனின் உண்மை சொரூபத்தை மறைத்து நிற்கின்றன; அவைகள் நீங்கினால்தான் ஆன்மப் பிரகாசம் வெளிப்பட்டுத் தோன்றும்.

காரிய உபாதிகள் ஏழு ஆவன :—

1.	ஞானேந்திரியம்	1	
2.	கர்மேந்திரியம்	1	
3.	அந்தக்கரணங்கள்	4	
4.	பிராணன்	1	
	ஆக உபாதிகள்	7	ஆகும்

சீவன் இந்த ஏழு உபாதிகளோடும் சேர்ந்திருக்கும்போது அசுத்தம் என்பது, அவற்றை நீங்கி தனித்திருக்கும்போது சுத்தம் என்பதுமாம். இந்தக் காரிய உபாதிகள் ஏழும் சீவனுக்கு தூலம், சூக்குமம், காரணம் என்ற மூன்று தேகங்களாய், மூன்று அவத்தைகளாய் இருக்கின்றன. எப்படியெனின் :—

1. ஏழு உபாதிகளும் சேர்ந்தது தூலதேகமாகும். அப்போது சீவன் அடையும் அவத்தை சீவசாக்கிரமாம். இதில் அபிமானித்த சீவனுக்கு "விசுவன்" என்ற நாமம்.

2. ஞானேந்திரிய கர்மேந்திரியங்களாகிய இரண்டு உபாதிகளும் நிற்க, அந்தக்கரண உபாதிகள்-4, பிராணன்-1 ஆக ஐந்து உபாதிகளுடனும் சேர்ந்துள்ளது சூக்குமதேகம். அப்போதைய அவத்தை சீவசொர்ப்பனமாம். இதில் அபிமானித்த சீவனுக்கு தைசதன் என்ற நாமம்.

3. இந்திரிய உபாதிகள்-2, அந்தக்கரண உபாதிகள்-4 ஆக ஆறு உபாதிகளும் ஒடுங்கி நிற்க பிராண உபாதி ஒன்றுடன் மட்டும் கூடி நிற்கும் மூலப்பகுதி சீவனுக்கு காரணதேகமாம். அப்போதைய அவத்தை சீவசுழுத்தியாகும். இதில் அபிமானித்த சீவனுக்கு பிராஞ்ஞன் என்ற நாமமாகும்.

Koviloor Digital Library

இவ்வாறு மேற்சொன்ன உபாதிகள் ஏழுடனும் கூடிநின்ற தூலதேகத்தின் சீவசாக்கிரம் சொப்பனத்தில் அழிகிறபடியால் இந்த தூலதேகம் நீயல்ல.

இனி ஐந்து உபாதிகளுடன் கூடிநின்ற சூக்கும தேகத்தின் சீவசொர்ப்பனம் சுழுத்தியில் அழிகிறபடியால் இந்த சூக்கும தேகமும் நீயல்ல.

இனி பிராணன் என்ற ஒரு உபாதியுடன் கூடிநின்ற மூலப் பகுதியான காரண தேகத்தின் சீவசுழுத்தி துரியத்தில் அழிகின்றபடியால் இந்தக் காரணதேகமும் நீயல்ல.

இந்த உபாதி, தேகம், அவத்தை, அபிமான நாமம் முதலிய எல்லா துரிசுகளையும் விட்டு நீங்கி சீவதுரியத்தில் சாக்ஷிமாத்திரமாய் விளங்கிக்கொண்டிருக்கும் சைதன்யமான அறிவே ஆத்ம சொரூபமாகும்.

II. தத்பதம்: "தத்பதம்" என்பது "அது" என்ற பரம். இப்பரத்திற்கும் மூன்று தேகங்களும் ஏழு உபாதிகளும் உள. மேலே சொல்லப்பட்ட புருடன், காலபரம், வியோமம் என்ற மூவகை அறிவுருவான சீவதுரியம் பரனுக்கு மூன்று உடலாயும், ஏழு உபாதிகளாகவும் அமைந்துள்ளன.

பரனுக்கு புருடதத்துவம் தூலதேகமாகவும், காலபரதத்துவம் சூக்கும தேகமாகவும், வியோமதத்துவம் காரண சரீரமாகவும் அமைந்துள்ளன.

ஏழு உபாதிகள் அல்லது திரைகள்

1. சர்வஞ்ஞன் - எல்லாவற்றையும் அறிந்துகொண்டிருப்பவன்.
2. சர்வகாரணன் - எல்லாம் அழிந்தவிடத்தும் தான் அழியாமல் நித்தனாய் இருத்தல்.
3. சர்வேந்திரியாமி - எல்லாவற்றிலும் உள்ளீடாக இருப்பவன்.
4. சர்வேஸ்வரன் - எல்லாவற்றிற்கும் மேலான அதிபதியாய் இருத்தல்.
5. சர்வசிருஷ்டி - எல்லாவற்றையும் தோற்றுவித்தல்.
6. சர்வ திதி - எல்லாவற்றையும் பரிபாலித்தல்.
7. சர்வசங்காரம் - எல்லாம் தன்னுள் ஒடுங்குதல்,

Koviloor Digital Library

பரனுக்கு இந்த ஏழும் காரண உபாதிகளாகும். அந்த பரம் இந்த உபாதிகளை நான் என்று அபிமானித்தபோது அசுத்தம் என்றும், அவ்வுபாதிகளை கடந்து நின்றபோது சுத்தம் என்றும் சொல்லப்படும். இந்த ஏழு உபாதிகளே அருட்பெருஞ் ஜோதியை மறைத்து நிற்கும் ஏழு திரைகளாம்.

சகல துரிசுகளுமற்ற சுத்தமான துரியத்துக்கு இந்த ஏழு உபாதி நாமங்கள் வருவானேன் எனின் சர்வேந்திரிய சர்வ சராசரங்களும் தன்னிடத்திலே தோன்றி, விளங்கி, ஒடுங்கலாலும், அவைகள் தனக்கு அன்னியமெனக் கண்டு சாட்சி மாத்திரையாய் இருப்பதாலும் ஆத்மதுரியத்துக்கு இவ்வொரு தூடனம் (குற்றம்) உண்டாய், உபாதி நாமங்களைப் பொருந்தி பரனுக்கு உடலாயிற்று என்று அறிக.

(1) மேற்சொன்ன ஏழு உபதிகளுடன் சம்பந்தித்த புருடத்துவம் பரனுக்கு தூலதேகமாயும், அபிமான நாமம் விராட்புருடன் என்றும், அவத்தை பரசாக்கிரமாயும் இருக்கும்.

(2) இந்த ஏழு உபாதிகளில் முதல் நான்கும் நிற்க, மற்ற மூன்று உபாதிகளுடனும் சம்பந்தித்த காலபாதத்துவம் பரனுக்கு சூக்குமதேகமாயும், அபிமானநாமம் இரணியகர்ப்பன் என்றும், அவத்தை பரசொப்பனமாயும் இருக்கும்.

(3) ஏழு உபாதிகளில் முதல் ஆறும் நிற்க, கடைசி சர்வ சங்காரமாகிய ஒரு உபாதியுடன் சம்பந்தித்த வியோமதத்துவம் பரனுக்கு காரணதேகமாயும், அபிமானநாமம் அவ்வியாகிர்தம் என்றும், அவத்தை பரசுழுத்தியாயும் இருக்கும்.

பரசாக்கிரம் பரசொப்பனத்தில் அழிய, பரசொப்பனம் பரசுழுத்தியில் அழிய, இந்த மூன்று அவத்தைகளையும் கண்டு கழன்றி அதை விட்டு நீங்கிய பரதுரியமே "அது" என்ற பர சொரூபம்.

இவ்வாறு ஏழு உபாதிகளும் "அது" என்ற பரசொரூபம் அல்ல. இந்த ஏழு உபாதிகளும் யாதொரு சைதன்யத்தால் கண்டு அளவிடப்படுகின்றதோ அதுவே பரசொரூபம்.

சர்வமும் தன்மயமாய், தனக்கு அன்னிய மல்லாமல் எல்லாம் தானாக விளங்கி, போக்குவரவு இன்றி, உள்ளும் புறமும் தானாகித் தன்மயமாய் நின்றதுவே பரதுரியமான பரம்பர சொரூபமாகும்.

Koviloor Digital Library

III. அசிபதம்:—"அசிபதம்" என்பது "ஆனாய்" என்ற ஐக்கியப்பொருளாகிய சிவத்தைக் குறித்து நின்றது. அதனாற் றான் அசிபதத்திற்கு ஒன்றும் அசிபதம் என்ற அடைமொழி கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்சொன்ன "தத்பத" சுத்தமான பரன் பரிபூரணனாக வும், எல்லாம் தானாகவும் விளங்கினாலும் அந்த பரனுக்கு ஒரு வாசனாதோஷம் உண்டு. அது யாதெனில் எல்லாம் தானாக விளங்குகின்றோம் என்னும் கொள்கையினாலும், ஆனாய் (அசி) என்ற சிவத்திற்குதான் மூன்று தேகமாய், மூன்று அவத்தைக் குறிகளைக்கொண்டு நிற்கையாலும் பரனுக்கு இந்த வாசனா தோஷம் உண்டாயிற்று.

ஆகையால் இந்த "தத்பத" சுத்தமான பரம்பொருளானது "அசிபத" பொருளான "ஆனாய்" என்ற சிவத்துக்கு மூன்று தேகமாகவும் மூன்று அவத்தையாயும் விளங்கும். அது எப்படி யெனில் பரம்பரம், விசுவக்கிராசம், உபசாந்தம் என்ற மூன்றும் சிவனுக்கு முறையே தூலம், சூக்குமம் காரணம் என்ற மூன்று தேகங்களாக விளங்கும். ஆதலால் இந்த மூன்றும் சிவசொருபம் அல்ல.

சிவத்தின் மூன்று தேகம், அவத்தை, நாமங்கள் வருமாறு:

(1) காண்பானும் காட்சிப்பொருளும் தானேயாகி பரி பூரணத்து விளங்கிய பரம்பரனே சிவனுக்கு தூலதேகமாம்; இதை அபிமானித்து விளங்கிய சிவத்துக்கு சிம்சோலிதை எனப் பெயர்; அவத்தை சிவசாக்கிரமாம்.

(2) மேலே சொன்ன சிவசாக்கிரமான பரம்பரன் சகல சகத்தையும் விழுங்கி, தானே சகரூபமாய் சூரியனும் கதிரும் போலவும், மணியும ஒளியும் போலவும், பண்ணும் இசையும் போலவும் அனன்னியமாய் நின்ற விசுவக்கிராசமே சிவனுக்கு சூக்குமதேகம். இதை தான் என்று அபிமானித்த சிவனின் அபிமான நாமம் பிரகாசபத்தினன் என்பதாம் அவத்தை சிவசொப்பனமாகும்

இதைத்தான் வள்ளல் பெருமான் "விசுவம் உண்ட பான்மை" என அருளியுள்ளார். விசுவம் என்றால் எல்லாம், உலகம் என்ற பொருள். கண்ணனின் விசுவரூபத்தில் சகல உலகங்களையும் கண்டனன் அர்ச்சுனன்; கண்ணன் வாயைத்

Koviloor Digital Library

திறந்தபோது இந்த பிரபஞ்சத்தையே அவன் குட்சியில் கண்டனள் தாய் யசோதை.

(3) இந்த பரம்பரன் எல்லாம் தானய் விளங்குகிறேம் என்பதை மறந்து, தன்னையு மறந்து, தானும் இறந்து பரமாதீதமாய் சாந்தப்படுவதான உபசாந்தமே சிவனின் காரண தேகமாதும். இதை தான் என்று அபிமானித்த சிவனுக்கு அபிமான நாமம் போற்புவிசாந்தன் என்பதாம். அவத்தை சிவசுழுத்தியாம்.

மேலே சொன்ன சிவசாக்கிரம் சிவசொப்பனத்தில் அழிய, சிவசொப்பனம் சிவசுழுத்தியில் அழிய, இனி இந்த உபசாந்த சிவசுழுத்தியும் சிவதுரியத்தில் அழியுமாதலால் இந்த மூன்று தேகமும், நாமமும், அவத்தையும் சிவசொருபம் அல்ல.

பின் சிவசொருபம் யாதெனில் இந்த மூன்று தேகத்தையும், அவத்தையையும் கண்டு கழன்று மேலான அறிவு என்ற சிவதுரிய சயம்பிரகாச குருபாதம் ஒன்றே சிவசொருபமாகும்.

இப்படி எல்லா உபாதிகளும், எல்லா அவத்தைகளும், எல்லா அபிமான நாமங்களும் தீர்ந்த இடத்தில் சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற முத்துரியமாய், அந்த முத்துரியமும் இறந்து துரியாதீத சுத்த அறிவாகாரமான பிரமமே சிவானுபவாம்.

இவ்வாறு நாமருபங்களால் குறிக்கப்படாமல் தற்பிரகாசமான குருசொருபம் மனத்தால் எண்ணவும், வாக்கினல் சொல்லவும் முடியாமல் இருக்கின்றதாகையால் இதுவே மவுனமாதும். ஆதலால் மனம், வாக்கு, காயம் மூன்றும் இறந்து வாக்கு மனதீதமாய் தற்பிரகாசமான சொருபமானதே மவுன முத்திரை எனப்படும்.

இதுவே மவுன முத்திரை எனக்கண்டு, அக்கருத்தையும் எண்ணத்தையும் விட்டு, சும்மா இருந்தபடி இருப்பதே மகா மவுன நிலையாதும்; இதுவே பரார்த்த நிச்சயார்த்தம். மோனம் என்பது ஞான வரம்பு.

இத்தத்துவங்கட்கும் அவதரங்கட்கும் அப்பாற்பட்டு அதீதமாய் அமர்ந்தவன் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவன்.

ஆதலால் தற்பிரகாசமான குருசொருபம் நிராலம்பமாய், நிராமயமாய், நிராதாரமாய் சர்வமும் பிரமமயமாய் விளங்குகின்றது. இதுவே சத்தியம், ஞானம், அனந்தம், ஆனந்தம்

Koviloor Digital Library

என்றும்; சக, சீவ, பரம் என்றும் விளங்கா நின்றது. இதுவே "தத்வமசி" என்ற மகாவாக்கியத்தில் தத்பதமும், தத்பதார்தத மும்; தொம்பதமும், தொம்பதார்த்தமும்; அசிபதமும், அசி பதார்த்தமும்; உபாதி பேதங்களும், அவத்தை நிலைகளும், அபிமானிகளும், சீவதுரியம், பரதுரியம், சிவதுரியம் என்ற மூன்று துரியங்களாய், இவற்றிற்கு மேற்பட்ட துரியாதீதமான பொருளாய் இருக்கும் தன்மயமான பிரமமே வேதாந்தத்தின் உண்மை தெளிந்த பரப்பிரம தரிசனமாகும்,

சகல வேதாகம புராண சாத்திரங்களும், ஷட்சமயசங்கற்ப விகற்பங்களும், அவற்றின் பேதமாய் இருந்த பொருள்களும் இதுவேயாகும். இந்த வேதாகம சாரத்தை, திருவருட்பா மகாதேவ மாலையிலுள்ள ஏழாவது பாட்டின் முதல் பகுதியில் "இந்தியம்" முதல் "பரம்பரம்" வரையிலான ஏழு பதங்களி லும், இரண்டாம் பகுதியில் "விசுவம்" முதல் "அசிபதம்" வரையிலான ஏழு பதங்களிலும் வகுத்து தொகுத்து விரவி பொதிந்து வைத்துள்ளார் வள்ளலார்.

ஓம் இராமலிங்காய நம:

வாழியெனை தூக்கிவைத்த கரதலங்கள்
வாழியெலாம் வல்ல மணிமன்றம்—வாழிநடம்
வாழி அருட்ஜோதி வாழி, நடராஜன்
வாழி சிவஞான வழி. 1

வாழிஎன் ஆண்டவன், வாழிஎன்கோன் அருள், வாய்மைஎன்றும்
வாழி எம்மான்புகழ் வாழி என்நாதன் மலர்ப்பதங்கள்
வாழி மெய்ச்சுத்த சன்மார்க்கப் பெருநெறி மாண்புகொண்டு
வாழி இவ்வையமும், வானமும், மற்றவும் வாழியவே. 2

திருச்சிற்றம்பலம்

Koviloor Digital Library

பின் இணைப்பு

இந்திய தத்துவ சாத்திரங்களில் அத்வைதம், துவைதம், விசிஷ்டாத்வைதம், சைவ சித்தாந்தம், வைஷ்ணவ சித்தாந்தம், நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாம்ஸம், வேதாந்தம், சைவத்திலும் வைஷ்ணவத்திலும பல உட்பிரிவுகள், பௌத்தம், சமணம், உலோகாயதம் முதலிய பலப்பிரிவுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என நான்காக வகுத்துள்ளனர். அவற்றுள் இரண்டு தத்துவக் கொள்கைகள் ஒன்றுக்கொன்று நேர்மாறானதும் வடதுருவத்தையும் தென்துருவத்தையும் போன்றும், வலது சாரி இடது சாரி தீவிர வாதங்களாக அமைந்துள்ளன. அவற்றுள் ஒன்று கடவுள் என்ற ஒருவர் இல்லை; ஆன்மாக்கள் எனபதில்லை; பாவ புண்ணியங்கள், நரக சொர்க்கங்கள் என்பதில்லை, மறுமை என்பதும் மோட்சம் என்பதுமில்லை; சாணத்திலிருந்தும் அழுக்கிலிருந்தும் புழுபூச்சிக்கள் ஜனிப்பது போன்று மண், நீர், தீ, காற்று எனற நான்கு பூதங்களின் சேர்க்கையால் இப்பிரபஞ்சம் தோன்றிற்று, கல்லீரலிலிருந்து பித்த நீர் சுரப்பது போன்று மூளையிலிருந்து எண்ணங்கள் உதிக்கின்றன; பூதங்கள் தேய்ந்து மறையும்போது உருவங்கள் அழிகின்றன. ஆதலால் இம்மையில் இவ்வுலகில் உயிரோடிருக்கும் போதே எப்படியாவது நன்குக உண்டு, உடுத்து, கண்டதே காட்சி கொண்டதேகோலம என்று சிற்றின்பத்தில் களித்திருப்பதே மக்களின் குறிக்கோளாக இருக்கவேண்டும் எனகிறது. இதற்கு உலோகாயதக் கொள்கை எனப் பெயர். இதைத் தோற்றுவித்தவர் சுக்கிராச்சாரியார் ஆவர்.

மற்றொன்று நாமே பிரமம், என்னைத் தவிர பிரம்மம் என்பது வேறில்லை, சர்வம் பிரம்ம மயம், பிரம்மம் ஒன்றே உண்மைப் பொருள். மற்றைய இப்பிரபஞ்சம் எல்லாம் மித்தை, பொய். நன்மை தீமைகள் என்பதில்லை, நரக சொர்க்கம் என்பதில்லை. ஆதலால் நாம் எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம்; காம இச்சை ஏற்பட்டால் பரஸ்திரிகமநம் செய்துகொள்ளலாம் என்கின்றது. இதற்கு ஏகான்மவாதம் என்ற கேவலாத்துவிதம் எனப் பெயர். இதன் ஆசிரியர் சங்கராச்சாரியர் ஆவர்.

Koviloor Digital Library

இவ்விரண்டு கொள்கைகளைப் பற்றியுமே திருவருட்பிரகாச வள்ளலார் தமது திருவருட்பாவில் கண்டித்திருக்கின்றார். உலோகாயதத்தைப் பற்றி வள்ளலார் என்ன சொல்லுகின்றார் என்பதைப் பார்ப்போம்.

பரம்எது? வினைசெயும் பயன்எது? பதிஎது?
பசுஎது? பாசம்எது?
பத்திஎது? அடைகின்ற முத்திஎது? அருள்எது
பாவ புண்ணியங்கள் எது?
வரம்எது? தவம்எது? விரதம்எது? ஒன்றுமிலை
மனம்விரும்பும் உணவு உண்டு, நல்
வத்திரம் அணிந்து, மடமாதர்தமைநாடி, நறு
மலர்சூடி, விளையாடி, மேல்
காம் எவவிட்டு, முலைதொட்டு வாழ்ந்து, அவரோடு
கலந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்டசுகம், இதே கைகண்ட பலன் எனும்
கயவரைக் கூடாது அருள்
தரமேவு சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. (தெய்வமணிமாலை)

என்று உலோகாயதர்களை கயவர்கள் என்று வன்மையாகக் கண்டித்துள்ளார் வள்ளலார்.

கேவலாத்துவிதம் என்ற ஏகான்ம வாதத்தைப் பற்றி வள்ளலார் என்ன கூறுகின்றார் என்பதையும் பார்ப்போம்.

நாம்பிரமம் நமைஅன்றி ஆம்பிரம்மம் வேறில்லை
நன்மை தீமைகளும் இல்லை
நவில்கின்ற ஆதியாந்தரம் இரண்டிலும் ஒன்ற
நடுநின்றது என்று வீண்நாள்
போம் பிரமநீதி கேட்போர் பிரமையாகவே
போதிப்பர், சாதிப்பர்; தாம்
புன்மைநெறி கைவிடார், தம்பிரமம் வினைஒன்று
போந்திடில் போகவிடுவார்

Koviloor Digital Library

சாம்பிரம்மமாம் இவர்கள்தாம் பிரமம் என்ற அறிவு
தாம்பு பாம்பு எனும் அறிவுகாண்
சத்துவ அகண்ட பரிபூரணாகார உப
சாந்த சிவசிற் பிரமம்நீ
தாம் பிரிவில் சென்னையில் கந்தகோட்டத்துள் வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி, உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே. (தெய்வமணிமாலை)

என்று திண்ணை வேதாந்தம் பேசும் ஏகான்ம வாதிகளை சாம்பிரம்ம என்று ஏளனம் செய்கின்றார் வள்ளலார்.

நூலில் கூறிய மகாதேவமாலை பதிகப்பாவில் வள்ளலார் கூறியிருப்பது சுத்தாத்வைத வேதாந்தமாகும்.

ஏழு திரைகளின் விளக்கம்


1. கரைவுஇல் மாயைக் கரும்பெரும் திரையால்
அரைசது மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (மாயாசத்தி)
2. பேர்உறு நீலப்பெருந் திரை அதனால்
ஆருயிர் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (கிரியாசத்தி)
3. பச்சைத்திரையால் பரவெளி அதனை
அச்சுற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (ஞானசத்தி)
4. செய்மைத்திரையால் சித்துறு வெளியை
அம்மையின் மறைக்கும் அருட்பெருஞ்சோதி (இச்சாசத்தி)
5. பொன்மைத்திரையால் பொருளுறு வெளியை
அன்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (பராசத்தி)
6. வெண்மைத்திரையால் மெய்ப்பதி வெளியை
அண்மையின் மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி (சிற்சத்தி)
7. கலப்புத்திரையால் கருது அனுபவங்களை
அலப்புற மறைக்கும் அருட்பெருஞ்ஜோதி. (ஆதிசத்தி)

அருட்பெருஞ்ஜோதி அகவல்
திருவருட்பா

(4-ம் பக்கம் படத்தைப் பார்க்கவும்)

இராமலிங்காய நம:

Koviloor Digital Library



Koviloor Digital Library

ஆசிரியர் வெளியிட்டிருக்கும் நூல்கள்

(1) சிவஞான போதம் மறைபொருள் விளக்கம்

(2) பாவையெம்பாவையும் பள்ளியெழுச்சியும்

(3) கூட்டுப் பிரார்த்தனைப் பாமாலை

(4) வள்ளலாரும் வேதாந்தமும்

(5) சின்முத்திரையின் மறைபொருள் தத்துவ விளக்கம்

—

ஆசிரியர் வெளியிட இருக்கும் நூல்கள்

(6) திருச்சிற்றம்பலம் என்ற
சிற்சபையும் பொற்சபையும்
அவனியின் அந்தரங்க அருளரசு

(7) வள்ளலாரும் சித்தாந்தமும்

(8) தேகம் தேகி அல்லது உயிர் மெய் உபாதிகள்

(9) ஞான சாதனங்களும் தீட்சாப் படிகளும்

(10) விஞ்ஞான மெய்ஞ்ஞான ஒளியில் கந்தபுராணம்